உ

பராசக்திதுணை.

துரோபதையம்மன்பேரில் விருத்தம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோன்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என், சி.

1914.

விளம்பரம்.

சாதகாலங்காரம்.

மூலமும - உரையும்.

இச் சென்னையின்கண் முன்னோர்கள் அருளிச்செய்த பல சோதிட நூல்கள் உள்ளன. அவற்றுள் இரண்டொரு நூற்களே மிக்க பயன்படத்தக்கவைகளும், வரிசைக்கிரமமாகச் செய்யப்பட்டவையுமாகும். அப்படிப்பட்டவற்றுள் சாதகாலங்காரம் என்பதுஎன்று அதற்கு இதுவரைக்கும் உரையில்லாத பெருங்குறையை நோக்கிப் பலரும் என்னை வற்புறுத்தியபடியால் அதற்குத் தக்கவாறு உரையெழுதி பன்னிரண்டு பாகங்களும் நன்றாய் விளங்கும்படி விளக்கி அச்சிட்டிருக்கின்றோம். வேண்டியவர்கள் எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை ரூபா 1 8 0

உ

பராசக்திதுணை.

துரோபதையம்மன்பேரில்

விருத்தம்.

சீர்பெற்றயுலகினில் துவாபர யுகத்தினில் ஜென்மி த்துஜவராக, செங்கோலுக்கதிபதி தர்மபுத்திரர்வீமர் தனஞ்செயனகுலசாதர், பேர்பெற்றதிருதராட் டிரன் மைந்தன் துரியனுடன் சூதாடி புவிதோர்த்துதான், தேவிபாஞ்சாலியும் ஐவரும்வனவாசம் சென்றுதான்பன்னிரண்டு, நேர்பெற்றஅக்யாதம் ஓராண்டுசெல்லவே நின்றுதான் விராடபுரத்தில், நெடியமால்தயவினல் பாரத முடிக்கவே நிகரிலாப் போர்ப்பொருந்தி, மாருத்த துரியன்மேல் நின்றுதான்விரிகூந்தல் வாரியே முடித்தவுமையே, வனர்க்கிளிகத பமணி குங்குமவசந்தநெரி மதிரூப பாஞ்சாலியே. (க)

நீடாளும்பாஞ்சாலன் எக்கியந்தன்னிலே நீயொரு பெண்பிறந்தாய், நெடியதொருவில்தனை வளைத்தவர்தம க்குநீ நிட்சயந்தருவனென்ருய், சோடாகசுயமரஞ் சாட்

டியதுருபதன் துரோபதை தனக்குமணமே, சொல்லரிய துரியோதிர ராஜனுந்தம்பிமார் தொல்புவிமன்னவர்களும், ஆடாதவில்தனை நாணேரிடாமலே அவமதிப்பட்டு நிற்க, அப்போது வனவாசம் காட்டினில் திரிந்தவர்களவருந்தானிருக்க, வாடாதவில்தனை வளைத்துதானர்ச்சுனன் மாலைதானிட்டுகொண்டார், வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெரி மதிரூபபாஞ்சாலியே. (௨)

தர்மமேசித்தியம் தர்மமேமுத்தியும் தர்மருங் கொலுவிருக்க, தாஷ்டீகவீமனும் அர்ச்சுனனும்நகுல சகாதேவனருகிருக்க, வரமுள்ளதேவியுனை ஐவர்க்கும்பாரியாம் மாதுநீ அருகிருக்க, மாதுநீயொருவர்க்கும் பாரியுமல்லகாண் மற்பொருந்து பார்க்கவந்தாய், சாருத்தபோசினி ஐவரையுங்கொடுவந்து சபதமேமுடித்தவுமையே, சங்கரிபார்வதி வுந்தனிடமகிமையான் சாற்றவேமுடியுமோதான், வர்மமகுணவஞ்சியே மாயோன் சகோதரி வந்தென்னை ரட்சித்திடும், வனர்க்கிளி கதம்பமணி குங்குமவசந்தநெரி மதிரூபபாஞ்சாலியே (௩)

பஞ்சவரைதுரியனும் விருந்துக்கு வாவென்று பரிவாகவேயழைத்து, பாதகன்ஜகுனியும் வசனுபியைக்கல

ந்து பரிந்திட னமுதளித்தான், வஞ்சனையறிந்துதான் மாயவர்கிருஷ்ணரும் வண்டாய்ப்பறந்துவந்து, மணிரத் னதீபத்தை யணைக்கவேபஞ்சவர்கள் மனம்வாடி திகைத் துநின்றார், நெஞ்சினில்கபடமது யில்லாதவீமனும்நிறை ந்த அமுதேயுருட்டி, நெடியமால்தயவினால் பசியாரிவீம னும்படுக்கையால்மூர்ச்சைபானார், வஞ்சியேதுளபமணி மாலையர்வயித்தியராய் வந்துமதவீமருக் குயிரளித்தார், வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெரி மதிரூப்பாஞ் சாலியே. (௪)

ஐவரையுங்கொண்டுபோய் அரக்குமாளிகையினில டைத்துதான்துரியோதிரன், அருகண்டவிலங்கிட்டுஅக் கினியைமூட்டினான் அப்போதுதர்மர்தானும், செய்யும் வகையேதென்று தேவரீர்மாயவரை சிந்தையில்நினைந்த போது, செந்துளவமாலையர் வந்துதானைவரையும் தற் காத்துரக்ஷித்தனர், தையலாள் துரோபதையை சபையி லேகொண்டுவா தம்பிதுற்சாதனந்தான், சற்றுந்தயவில் லாமல் பத்தினி துகில்தனை கத்திரித்தேயுரிந்தார், வைய கமளந்தவரை மனதினில்நினைந்திட மாளாது துகிலளித் தார், வனர்க்கிளி கதம்பமணி குங்குமவசந்தநெரி மதி ரூபபாஞ்சாலியே. (ரு)

துரோபதையம்மன்பேரில் விருத்தம்.

பன்னிரண் டாண்டுதான் சென்றுமேவனவாசம் ப‍ருகியே அக்யாதந்தான், பாராளும்விராடனூர் பக்ஷலில் ஐவரும்பத்தினி மறுவேலமாய், தனியாக மயல்கொள்ள கீசகன் தனைக்கொல்ல தாஷ்டீக வீமன்றானும், தாக்கிய அர்ச்சுனன் சண்டைக்கு மாடுபிடி சாரதிமாயன்றானும், பனிசூழும்பாராளும் துரியனூர்பக்கலில் பலகனை தூதனுப்ப, பாதிநாடாளவே ஐந்தூருகேளுமென் பகரவேமாயனூர்க்கு, வாணிசூ ழர்ச்சுனபுரந்தனி லேகியே மாயவர் தூதுசென்றூர், வனர்க்கிளி கதம்பமணி குங்கும வசந்த நெரி மதிரூபபாஞ்சாலியே (சு)

பாரதம்பதினெட்டு நாளுமேசென்றபின் பரிவான தர்மருக்கு, பட்டாபிஷேகமே கட்டியேமகுடமுடி பண் பாகவேசூட்டியே, சாரதியானதொரு மாயவர்வந்துதான் சதுர்மறைகள்தானேதியே, சாத்தியே அரசாளும் செங்கோல்செலுத்தியே தர்மராஜனென்றுபோற்ற, வீர வாளுருவியே தம்பிமார்நால்வரும் வீரியே பக்கம் நிற்க, வீரதம்மட்டமும் முரசுமல்லாரிகை விருதுடன் ஆர்ப்பரிக்க, வன்னித்துரோபதாள் பட்டதேவியும் வந்துதானருகிருக்க, வனர்க்கிளி கதம்பமணி குங்குமவசந்தநெரி மதிரூபபாஞ்சாலியே. (எ)

உலகமதுஆண்டபின் கலிபிறந்ததுவென்று ஒன்ற கதம்பிமாரும், உமையவள் துரோபதையு மகாவேதஞ் சொல்லவே உடல்விட்டுவைகுந்தம்போய், நிலைமையுடன்தர்மரும் வொண்டியாய் வைகுந்தம் நெடியமால்பாதம் பெற, நிகரிலாமாயவன் கெருடனையழைத்துமே நீயெதி ராகுமென்றார், சலமதிர்க்குலந்தனை விமானத்தில் வைத் துடன் காட்டினார்வைகுந்தமே, கலியுகந்தன்னிலே அறி யவே அனைவர்க்கும் கண்கண்டதெய்வமாநீர், வரம்பெறு மடியார்கள் பங்கிலுறைவஞ்சியே மாதுநீ துரோபதம்மா ள், வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெரி மதிரூப பாஞ்சாலியே (அ)

கொந்தமுங்கொடிகளும் குமாரவர்க்கங்களுங்கொக் கரித்தண்டமதிர கூட்டமிட்டேயொரு பேய்களும் பூத மும் குருமுனி வன்புபில்லி, விந்தையாஞ் சாகினிமோகி னியிடாகினி யிரிசூலிகாட்டேரியும், வீரவீராக்களும் ரா ட்சதகணங்களும் விடுபட்டராவிரிஷியும், உந்தன்வீரப ண்டாரமும் சாட்டியும்மணிகளும் காணவே திடுக்கிட்டு தான், ஓயம்மேஓயம்மே நேய்போயினேயென்று ஓடுமே கொக்கரித்து, வந்துநீ அடியேனை காத்துரக்ஷித்திடும்மா வீர பாஞ்சாலியே, வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந் தநெரி மதிரூபபாஞ்சாலியே. (கூ)

பத்துமேபக்தியுடன் பாடினே னுன்மீதில் பராசத்திதுரோபதம்மா, பாஞ்சாலகன்னியே வீரமல்லாரியே பத்தினிபரமேஸ்வரி, நித்தமுன்பாதமலர் நினைவிலேநினைந்திட நிற்குமோபவங்களம்மா, நீலிபாஞ்சாலிநீ காலகபாலியே நெடியமால்தங்கையம்மா, உத்தமிதுரோபதாள் நித்யகலியாணியே யோங்கார வீரசத்தி, யுல்லாசகாமிநீ சல்லாபூவாணிநீ யுமையபாஞ் சாலிகன்னி, லவத்திடுஞ் சித்தமென் வல்வினையைநீக்கிடும் மகாவீர பாஞ்சாலியே, வனர்க்கிளிகதம்பமணி குங்குமவசந்தநெரி மதிரூபபாஞ்சாலியே. (௧௦)

துரோபதையம்மன்பேரில் விருத்தம்.

மு ற் றி ற் று.